சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04-ம் நாள் புதன்கிழமை

வழக்கிடை மனு எண்.04/2025 in அசல் வழக்கு எண்.339/2023

1. கெங்கம்மாள்
2. லோகநாதன் ...... மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

சிந்தாமணியம்மாள் ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 28.01.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.விநாயகம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இருப்பதால், வா.சா.1-ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய அனுமதி கோரி கட்டளை XVIII விதி 17 உ.வி.மு.ச. இன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்-**

தான் இம்மனுவில் 2ம் மனுதாரர் என்றும், மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கினை வாதிகள் தங்கள் மீது தொடர்ந்து தற்போது நிலுவையில் இருந்து வருவதாகவும், தங்கள் தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்ய 09.10.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதாலும், 1ம் எதிர்மனுதாரர் வயது முதிர்வின் காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், தன் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு வாதத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், கடந்த 09.10.2025 தேதியன்று தங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், எனவே வா.சா.1 ஐ மீண்டும் ரீ கால் செய்ய உத்தரவிடக்கோரியும், வா.சா.1-ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்யவேண்டும் என்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்உரையின் சுருக்கம்**:-

மனுதாரரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அபிடவிட்டில் சொல்லியுள்ள காரணங்கள் சற்றும் சரியல்ல என்றும், இந்த வழக்கு கடந்த 09.10.2025 அன்று இவ்வெதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா

போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதாலும 1ம் மனுதாரரின் வயது முதிர்ச்சியாலும் தன்னுடைய வழக்கறிஞரை சந்தித்து ஆஜராக முடியவில்லை என்றும், அதனால் இவ்வெதிர்மனுதாரர் தரப்பு முதல் சாட்சியத்தை மீண்டும் விசாரணை செய்ய வழக்கை ரீ கால் செய்ய வேண்டும் என்று கோரி தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கதக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் மனுதாரருக்கு போதிய அவகாசம் வழங்கியும், இவ்வெதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாததால் தான் கடந்த 09.10.2025 அன்று எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டு தீர்ப்புக்காக 29.10.2025 அன்று வாய்தா போடப்பட்டதாகவும், இந்த நிலையில் மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கு கடந்த 2 வருடங்களாகவே நிலுவையில் இருந்து விசாரணைக்கு பட்டியலில் போடப்பட்டு 17.06.2025 அன்று இவ்வெதிர்மனுதாரர் தன்னை வாதி தரப்பு முதல் சாட்சியாக விசாரணைக்கு உட்படுத்திக்கொண்டார் என்றும், ஆனால் எதிர்மனுதாரரை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், வேண்டுமென்றே எதிர்மனுதாரரை மனுதாரர்கள் அலைகழித்ததாகவும், எனவே இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. <u>இங்கு தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்:-</u>

**இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.**

(i) மனுதாரர்கள் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், 2ம் மனுதாரருக்கு உடல்நலக்குறைவு காரணமாகவும், 1ம் மனுதாரருக்கு வயது

முதிர்வின் காரணமாகவும், நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், இதனால் நீதிமன்றத்தில் மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த தினத்தில் அவரால் ஆஜராக இயலவில்லை என்றும், மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தால் மட்டுமே வழக்கு பிரச்சினைக்கு சரியான தீர்வு காண இயலும் என்றும் வாதிட்டார். மாறாக எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது பொய்யான காரணங்களைக் கூறி மனு தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி தினத்தில் மனுதாரர் உடல்நலக்குறைவு ஏற்படவில்லை என்றும், எனவே காலம் கடத்தும் நோக்கத்தில் காலம் கடந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

(ii) வழக்கு ஆவணங்களை உற்றுநோக்கும் போது வழக்கின் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமைவிளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பில் வாதி வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்ட சமயத்தில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாத காரணத்தினால் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. தற்போது வா.சா.ஆ.1-ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வா.சா.ஆ.1 மறுபடியும்

அழைக்க வேண்டி (Recall) இம்மனு கட்டளை XVIII விதி 17 உ.வி.மு.ச வின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) மேலும் கட்டளை XVIII விதி 17 படி, வழக்கு விசாரணையின் எந்த நிலையிலும் சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்கலாம் என்று பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Order XVIII Rule 17. Court may recall and examine witness.-** The Court may at any stage of a suit recall any witness who has been examined and may (subject to the law of evidence for the time being in force) put such question to him as the Court thinks fit.

எனவே இருதரப்பையும் முழுமையாக விசாரணை செய்த பிறகு இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலணை செய்து வழங்கும் தீர்ப்பே முழுமையானதாக இருக்கும் என்பதால், வா.சா.ஆ.1-ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால், இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இவ்வாறாக இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

<u>**முடிவில்:-**</u>

மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.500/-ஐ வருகின்ற 16.02.2026-ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும்,

தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியானதாகக் கருதப்படும். மீண்டும் இந்த மனு 17.02.2026 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.04 17:37:27 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.04 17:37:33 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.